சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "பாக்கணும் போல இருக்கு" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரிக்கப்பட்டது – சென்னை உயர் நீதிமன்ற ஆணையின்படி – பரிசீலனை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை

அரசாணை (டி) எண். 150 — நாள் 18.03.2013

8832

நந்தன, பங்குனி, 5
திருவள்ளுவர் ஆண்டு, 2044

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/4492/2012, நாள் 13.02.2012, தேர்வுக்குழு எண்.23/2011–2012.
4. அரசாணை (டி) எண்.86, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 05.03.2012.
5. சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண். 1992/2013, ஆணை நாள் 24.01.2013.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "பாக்கணும் போல இருக்கு" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு அனைத்து உறுப்பினர்களும் இத்திரைப்படம் வரிவிலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என செய்த பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி இருந்தார்.

3. நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பரிசீலனை செய்து "பாக்கணும் போல இருக்கு" தமிழ் திரைப்படம் தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்க தகுதியானது அல்ல என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்பட்டது.

4. இந்நிலையில், திருவாளர் பரதன் பிலிம்ஸ் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில், “பாக்கணும் போல இருக்கு” தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து, அரசாணை (டி) எண். 86, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 05.03.2012 –ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையினை ரத்துச் செய்யுமாறு நீதிப்பேராணை எண்.1992/2013–ல் வழக்குத் தொடுத்தனர்.

5. சென்னை உயர்நீதிமன்றம் இவ்வழக்கினை ஏற்று, மேற்காணும் தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்ததற்கான காரணங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என தெரிவித்து, அரசாணையை ரத்து செய்துள்ளது. இந்நேர்வில் மனுதாரரின் கோரிக்கையினை மறுபரிசீலனை செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

6. மேற்கண்ட சூழ்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி “பாக்கணும் போல இருக்கு” தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை தொடர்பாக அரசு மீண்டும் கவனமுடன் பரிசீலனைச் செய்தது. இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிக்க கோரி மனுதாரர் 6.2.2012–ல் விண்ணப்பித்தார். 11.2.2012–ல் இத்திரைப்படம் தேர்வுக்குழு உறுப்பினர்களால் பார்வையிடப்பட்டது. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை, நாள் 21.07.2011 மற்றும் அரசாணை (நிலை) எண். 2, வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை, நாள் 03.01.2012 –ன் படி தமிழ் திரைப்படங்களை தேர்வுக்குழு பார்வையிட்டு பரிந்துரை செய்யப்பட்ட பின்பு, அத்திரைப்படங்களை மீண்டும் பார்வையிட வழிவகை செய்யப்படவில்லை. எனவே, “பாக்கணும் போல இருக்கு” தமிழ் திரைப்படத்தினை மீண்டும் தேர்வுக்குழு பார்வையிட இயலாது. எனினும், சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க இத்திரைப்படத்தினை ஏற்கெனவே பார்வையிட்ட தேர்வுக்குழுவின் பரிந்துரைகள் கவனமுடன் மறுபரிசீலனை செய்யப்பட்டன.

7. “பாக்கணும் போல இருக்கு” தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | கு. மகாலிங்கம்,<br>இணை ஆணையர் (வ.வ),<br>சென்னை (மையம்) கோட்டம்,<br>சென்னை –6. | பள்ளிப் பருவக் காதலுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்பதாலும், படம் முழுக்க புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துதல் சம்பந்தப்பட்ட காட்சிகள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளதாலும், ஆபாசக் காட்சிகள் மற்றும் ஆபாச வார்த்தைகள் இடம் பெற்றுள்ளதாலும் வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 2. | ந.அருள்,<br>இயக்குநர், மொழிபெயர்ப்பு | தலைப்பு சரியான தமிழ் இல்லை என்பதாலும், ஏறக்குறைய 200 ஆங்கிலச் சொற்கள் பெருகியுள்ளதாலும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும், பண்பாட்டிற்கும் உட்படாததால் வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | V.S. ராகவன்,<br>பழம்பெரும் நடிகர் | படத்தின் தலைப்பு தமிழ் மொழியில் இருப்பதாக தோன்றவில்லை என்பதாலும், நகைச்சுவை என்ற பெயரில் ஆபாச வசனங்களும், காணத்தகாத காட்சிகள் சிலவும் உள்ளதாலும், குடும்பத்தோடு காணக்கூடிய படம் அல்ல என்பதாலும் வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |

| | | |
|---|---|---|
| 4. | பாபு,<br>ஒளிப்பதிவாளர் | மது அருந்தும் காட்சிகள் மிக அதிகமாக உள்ளதாலும், நகைச்சுவை என்ற பெயரில் ஆபாசம் கொஞ்சம் அதிகமாக உள்ளதாலும் வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | ராஜஸ்ரீ,<br>பழம்பெரும் நடிகை | தலைப்பு தமிழ் இல்லை என்பதாலும், தமிழ் மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லாததாலும் வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 6. | L.R. ஈஸ்வரி,<br>பின்னணிப் பாடகி | மது அருந்தும் காட்சிகளும், ஆபாச காட்சிகளும், ஆங்கில வார்த்தைகளும் இருப்பதாலும், தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாக இல்லை என்பதாலும் வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |

8. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், “பாக்கணும் போல இருக்கு” தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், “பாக்கணும் போல இருக்கு” தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை –104.

<u>நகல்:</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி (ம) பதிவு)) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/3/2013

பிரிவு அலுவலர்.

18/3/13